
වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
ANNUAL REPORT
2020
ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
National Institute of Language Education and Training
NILET

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**வருடாந்த அறிக்கை – 2020**

**பொருளடக்கம்**


| தொ.இல | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01. | நிறுவனத்தின் அமைவிடம் | 49 |
| 1.1 | கொழும்பு பிரதான காரியாலயம் | |
| 1.2 | அகலவத்தை பயிற்சி நிறுவனம் | |
| 02. | நிறுவனத்தின் நோக்கம் | 50 |
| 03. | நிறுவனத்தின் கடமைகள் | 51 |
| 04. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் - 2020 | 52 |
| 05. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆலோசனைச் சபை பற்றிய தகவல்கள் - 2020 | 52 |
| 06. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திக் கல்விச் சபை | 52-52 |
| 07. | 2020 ஆம் ஆண்டு நிறுவனத்தின் ஊழியர் குழாம் பற்றிய தகவல்கள் | 54 |
| 7.1 | ஊழியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளுதல் | 54 |
| 7.2 | நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் குழாம் | 55 |
| 7.3 | நிறுவனத்தின் கட்டமைப்பு | 56 |
| 7.4 | நிர்வாகப் பிரிவு | 56 |
| 7.5 | திட்டமிடல் பிரிவு பயிற்சிப் பிரிவு | |
| 7.6 | கணக்கியல் பிரிவு | 76-82 |
| 08. | கணக்காய்வாளர் அறிக்கை | |

## 01. நிறுவனத்தின் அமைவிடம்

### 1.1. கொழும்பு பிரதான காரியாலயம்

2020 ஆம் ஆண்டு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாகச் செயற்பாடுகள் 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் இடம்பெற்றது. பரந்துபட்டதாக, நாடு பூராகவும் மொழி கற்பித்தல் தொடர்பான பல்வேறு பாடநெறிகளைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்தல், நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளல், நிர்வாக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் ஆகிய நோக்கங்களுடன் கொழும்பு பிரதான காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

### 1.2 அகலவத்தை பயிற்சி நிலையம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கொழும்பிலிருந்து சுமார் 100 கி. மீ. தூரத்தில் களுத்துறை மாவட்டத்தில் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்குரிய சுமார் 2.5 ஏக்கர் பரப்புடைய காணி அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இற்றை வரை பயிற்சிப் பாடநெறிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஏற்ற ஓர் இடமாகவும் சூழலாகவும் இது பிரசித்தி பெற்றுள்ளது. மொழிக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மிகவும் இனிமையான முறையிலும், செயற்பாட்டு ரீதியிலும் மேற்கொள்வதற்கு ஏற்ற மனோரம்யமான சூழலையும் மனதைக் கவரக்கூடிய அமைப்பினையும் கொண்டமைந்த அகலவத்தை பயிற்சி நிலையம் வதிவிட வசதிகளையும் கொண்டமைந்துள்ளது.



2. **நிறுவனத்தின் நோக்கம்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்புச் சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களையும் உரைபெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர், உரைபெயர்ப்பாளர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குதல்.
- பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.
-



3. **நிறுவனத்தின் கடமைகள்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதன் பொருட்டு சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பாகவும் நீண்ட காலப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்காக ஆய்வு மற்றும் கற்றல் பெறுபேற்றினைப் பயன்படுத்துதலை நோக்காகக் கொண்டு மொழியினைப் பயிற்றுவிப்பதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நடாத்துதல்.
- தகைமையுடையவர்களுக்கு மொழிப் பயிற்சி மற்றும் மொழிக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலும் அப்பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதலும்.
- மொழியினைக் கற்பிப்பதற்காகப் பயிற்சியுடையவர்கள் உள்ளடங்கிய சபையினை நிறுவுதல்.

- மொழியுடன் தொடர்புடைய தகவல்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான நிலையம் ஒன்றை நிறுவுதல்.
- மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு, மற்றும் சுருக்கெழுத்தாளர் ஆகிய விசேட குழுவினர்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விசேட மொழிப் பயிற்சிப் பாடநெறியினை நடாத்துதல்.




**4. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் வருடத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவச் சபை பற்றிய தகவல்கள்**

நிறுவனத்தின் இலக்குகளை மிகவும் வினைத்திறனாகவும் முறைாகவும் நிறைவேற்றுவது தொடர்பான அனைத்து தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் முகாமைத்துவச் சபைக்கே உண்டு.2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 3(1) உறுப்புரையின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் அவர்களினால் முகாமைத்துவச் சபை தாபிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு முழுவதுமாகப் பரவிய கோவிட் 19 தொற்று காரணமாக நிறுவனத்தின் கடைமைகளை முறையாக மேற்கொள்வதற்கு முடியாமல் போன அதேவேளை, முகாமைத்துவச் சபையும் நியமனம் பெற்றிருக்கவில்லை.

## 5. 2020 ஆம் வருடத்துக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விச் சபை உறுப்பினர்கள்

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 07 ஆம் இலக்க ஏற்பாட்டின் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களின் மூலம் நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளிலே திட்டமிடல், கொள்கைகள், மற்றும் பரிந்துரைகள் என்பவற்றுக்கான நிபந்தனைகள், மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பவற்றை முறையாகவும் வினைத்திறன் கொண்டதாகவும் செயற்படுத்துவதற்குப் பல்வேறு பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மொழி, மொழியியல் மற்றும் கல்வித்துறைகளைச் சேர்ந்த கீழ்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்கப்படுவர். இவர்கள் நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளிலே பிரதிநிதித்துவப்படும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது நேரடியாக அதில் செயற்படுவர்.
2020 ஆம் ஆண்டு முழுவதுமாகப் பரவிய கோவிட் 19 தொற்று காரணமாக நிறுவனத்தின் கடைமைகளை முறையாக மேற்கொள்வதற்கு முடியாமல் போன அதேவேளை, கல்விச் சபையும் நியமனம் பெற்றிருக்கவில்லை.

## 6. கல்விச் சபையின் பொறுப்புகள்

- சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனத்தின் கல்வி சார் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைய பரீட்சைகளை நடாத்துதலும் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்படக்கூடிய ஏனைய நிபந்தனைகளைத் திருப்பதிகரமான முறையில் அடைந்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் பத்திரம் வழங்குதலும் மற்றும் நிறுவனத்தின் ஏனைய கலை தொடர்பான விருதுகளை வழங்குவதற்குத் தகைமையுடைய நபர்கள் தொடர்பாக முகாமைத்துவச் சபைக்கு சிபாரிசினை முன்வைத்தலும்.
- நிறுவனத்திற்கு சபையினால் ஆற்றுப்படுத்தப்பட்ட எந்தவொரு விடயம் தொடர்பான அறிக்கை தொடர்பாகவும் கவனமெடுத்தல்.

- நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற கல்விசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பாடநெறிகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தயாரித்து முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பித்தல்.
- நிறுவனத்தின் கல்வி சார் சபையினை நியமித்தல், பதவி நீக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தான சட்டங்கள், ஆட்சேர்ப்புத் திட்டம், சம்பளம், விசேட கொடுப்பனவு மற்றும் கட்டணம், சேவைக்காலம், விடுமுறை, ஆகியன தொடர்பாக முகாமைத்துவச் சபைக்கு சிபாரிசினை முன்வைத்தல்.
- புலமைப்பரிசில்கள், உதவிப் பணம், பதக்கம் மற்றும் பரிசில்களைப் பெறுவதற்காக பூரணப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் தொடர்பான சிபாரிசினை முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பித்தல்.
- புலமைப்பரிசில்கள், உதவிப் பணம், பதக்கம் மற்றும் பரிசில்கள் தொடர்பாக முகாமைத்துவச் சபையினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்கள் தொடர்பாக சிபாரிசினை முன்வைத்தல்.
- முகாமைத்துவச் சபையின் அனுமதியுடன் கல்விசார் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சபையினை நியமனம் செய்தல்.
- கல்விசார் சபையினது கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டியதுமான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்

## 7. <u>நிறுவனத்தின் ஊழியர் குழாம் - 2020</u>

நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பணிப்பாளர் நாயகம் ஆவார்.

முகாமைத்துவச் சபையின் வழிகாட்டல்களின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் பின்வரும் கடமைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகள்
2. நிறுவனத்தின் சகல ஊழியர்களையும் நியமித்தல் மற்றும் நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகள்
3. நிறுவனததினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான கண்காணிப்பும் இணைப்பாக்கமும்

## 7.1 ஊழியர்கள் நியமனம்

இவ்வருடத்தில் நிறுவனத்தின் ஊழியர் குழாத்தின் பொருட்டு சம்பளப் பதவியணி ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களின் பொருட்டு தற்காலிகமான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில்,

| பெயர் | பதவி | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 1) திரு.ஏ.எம்.எஸ்.என்.அத்தப்பத்து | முகாமைத்துவ உதவியாளர் | 2020/03/02 |
| 2) திரு.மகேஷ் தென்னே | முகாமைத்துவ உதவியாளர் | 2020/03/02 |
| 3) திரு.பீ.இந்திக்க பிரசன்ன பண்டார | காரியாலய உதவியாளர் | 2020/03/02 |
| 4) திரு.கே.எம்.பீ.பண்டாரநாயக்க | காரியாலய உதவியாளர் | 2020/03/02 |
| 5) திரு.எச்.எம்.களன விதுரங்க பண்டார | சாரதி | 2020/03/02 |
| 6) செல்வி.எஸ்.ஆர்.சீ. த சேரம் | ஒருங்கிணைப்பு உதவியாளர் | 2020/10/06 |
| 7) திரு.டீ.எஸ். சாந்த த சில்வா | முகாமைத்துவ உதவியாளர் | 2020/10/06 |
| 8) திருமதி.எச்.பீ.என்.என்.நிகாரி | முகாமைத்துவ உதவியாளர் | 2020/10/06 |
| 9) திரு.பீ.டப்.டீ.டீ.பீ.திலகரத்ன | காரியாலய உதவியாளர் | 2020/10/06 |
| 10) செல்வி. பீ.ஜீ.பி.குமாரி | காரியாலய உதவியாளர் | 2020/10/06 |
| 11) செல்வி. எல்.வீரசேகர | ஒருங்கிணைப்பு உதவியாளர் | 2020/12/18 |



**7.2 நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாம்**

| **பதவிப் பெயர்** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2. பணிப்பாளர் | 02 |
| 3. உதவிப் பணிப்பாளர் | 03 |
| 4. கணக்காளர் | 01 |
| 5. கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 05 |
| 6. நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 7. உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| 8. உதவி இணைப்பாளர்கள் | 10 |
| 9. நூலகர் | 01 |
| 10. முகாமைத்துவ உதவியாளர் | 12 |
| 11. மின்சாரம் மற்றும் விசைக் குழாய் இயக்குநர் | 01 |
| 12. சாரதி | 06 |
| 13. காரியாலய உதவியாளர் | 08 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | 52 |

இதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிறுவனத்தின் பதவியணி பின்வருமாறு:

| பதவிப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2. பணிப்பாளர் | 01 |
| 3. உதவிப் பணிப்பாளர் | 02 |
| 4. கணக்காளர் | 01 |
| 5. கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 05 |
| 6. நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 7. உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| 8. உதவி இணைப்பாளர்கள் | 10 |
| 9. முகாமைத்துவ உதவியாளர் | 12 |
| 10. சாரதி | 06 |
| 11. காரியாலய உதவியாளர் | 08 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | **48** |

## 7.3 நிறுவனத்தின் கட்டமைப்பு

நிறுவனத்தின் சேவைகளை இலகுவான முறையில் இட்டுச் செல்வதற்காக நிறுவனமானது பின்வரும் அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

### 7.4. நிர்வாகம் மற்றும் வழங்கல்கள் பிரிவு

நிறுவனத்தின் பதவியணியினருக்குரிய அனைத்து நிர்வாக மற்றும் நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது இப்பிரிவினாலாகும். நிறுவனத்தின் எந்தவொரு பகுதியினதும் காரியாலய நடவடிக்கைகள் தங்குதடையின்றி இயங்கும் வகையில் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஒவ்வொரு பிரிவுக்குமிடையே தொடர்புகளை மிகவும் சிறந்த முறையில் இப்பிரிவு பேணுகின்றது.

அத்துடன் இப்பிரிவு ஏனைய சகல பிரிவுகளுக்கும் தேவையாக அலுவலர் குழாத்தினை குறித்த செயற்பாட்டுத் திட்டத்தினூடாக இணைத்துக் கொள்வதோடு அவர்களின் நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி, ஊழியர் நலன்புரி மற்றும் வசதிகளை வழங்கி, அவ்வப்பிரிவுகளின் செயற்பாடுகளானது ஆக்கத்திறன் மிக்க வகையில் வினைத்திறன்

உடையதாக அமையும் பொருட்டுத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகளுக்கும் தேவையான கணினி இயந்திரங்கள், அலுவலகத்திற்கு அன்றாடம் தேவைப்படுகின்ற காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்தப்படுத்தல் சேவையினை வழங்குதல் உட்பட சகல நடவடிக்கைகளும் இப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறே நிறுவனத்தின் நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதியும் இப் பிரிவினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது.



**நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இதுவரை காலமும் பயணம் செய்த வெற்றிப் பாதையில் பங்களிப்பு செய்த மற்றுமொரு பிரிவாக, நிறுவனத்தில் பாடநெறிகளை நடாத்திச் செல்லும் வளவாளர்களுக்கு, நிறுவனத்தின் பாடநெறிகளில் பங்குபற்றுபவர்களுக்கு மற்றும்

பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக உதவி வழங்கும் நிறுவனத்தின் அலுவலர் குழாத்திற்கு அறிவு மற்றும் தகவல்களைச் சேகரித்துக் கொள்ளும் பொருட்டு வாசிக்கும் வசதியினை நூலகம் பெற்றுக் கொடுக்கின்றது.

மொழி தொடர்பான கற்றலுக்கு விசேட உதவிகளை நல்கக்கூடிய நூல்களால் பூரணமடைந்துள்ள இந்நூலகத்தில் நிர்வாக முகாமைத்துவம், கணக்கீடு, தகவல் தொழிநுட்பம், இலக்கியம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடப் பரப்புகளுடன் தொடர்புடைய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக இந்நூலகம் தேசிய மொழியைக் கற்பிக்கும் செயற்பாட்டின் போது அத்தியாவசியமான புத்தகங்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் மற்றும் பாவனையில் உள்ள சொற்பதங்கள், மொழியியல் விமர்சனங்கள் அதேபோன்று மொழிப் பயிற்சி வழங்குதல் மற்றும் மொழிப் பயிற்சி வழங்குவதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும், செவிப்புல உபகரணங்களையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

இவை தவிர இரண்டாம் மொழிக் கற்றலின்போது தேவைப்படுகின்ற நூல்கள், விமர்சன நூல்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல், சுயசரிதை நூல்களை வழங்குதல் என்பன இந்நூலகத்தினால் நிறைவேற்றப்படும் மற்றுமொரு சேவையாகும். இதற்கு மேலதிகமாக மொழி தொடர்பான விடயங்கள் குறித்தான தகவல்கள் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையமாக விளங்குவதுடன், பல்வேறு மொழிகள் தொடர்பாக தேசிய மட்டத்திலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வு தொடர்பான ஆவணப்படுத்தல்களுக்கான நிலையமாகவும் நூலகம் காணப்படுகின்றது.

**திட்டமிடல் பிரிவு**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் மற்றும் குறிக்கோளினை நிறைவேற்றும் பொருட்டுத் தேவையான திட்டமிடல்களை மேற்கொள்ளுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளபப்டும் பிரதான செயற்பாடாகும்.

பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்ளுதல், இதனடிப்படையில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் மாதாந்தம் நிறைவேற்றப்படவேண்டிய செயற்பாடுகளைத் திட்டமிடல் என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அத்துடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கை, காலாண்டு முன்னேற்ற அறிக்கை மற்றும் நிறுவனத்தின் வருடாந்த அடைவு அறிக்கையினைத் தயாரித்து குறித்த பிரிவிற்குச் சமர்ப்பித்தல் என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக அவ்வப்போது ஒப்படைக்கப்படும் விசேட பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கு செய்தல், நடைமுறைப்படுத்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

## வருடாந்த முன்னேற்ற அறிக்கை - 2020

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மும்மொழிக் கொள்ளையை மேம்படுத்தும் வகையில் தேசிய மொழிகள், சமூக மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாக 2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் ஆரம்பமாக அதாவது, 2007 நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இந்நிறுவனம் அரசியலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கி வந்ததோடு இந்நிறுவனம் அந்த அமைச்சு இயங்கி வந்த 310, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் இயங்கி வந்தது. 2010 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் அமைச்சானது தேசிய மொழிகள் மற்றும் சமூக மேம்பாடு எனப் பெயர் மாற்றம் பெற்றதோடு இந்நிறுவனமும் அவ்வமைச்சின கீழ் செயற்படும் ஒரு நிறுவனமாக இயங்கி வந்தது.

2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் நிறுவனத்தின் பிரதான காரியாலயம் இலக்கம் 155/

யு காசல் வீதி, கொழும்பு 08 என்னும் முகவரியில் இயங்கி வந்ததோடு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் 2015 பெப்ரவரி 28ஆம் திகதி வரை இரண்டாம் மாடி, கட்டிட இலக்கம் 09, பண்டாராநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம், கொழும்பு 07 என்னும் முகவரியிலும் 2017 மே மாதம் 30 ஆம் திகதி முதல் 40, புத்தகமுவ வீதி, இராஜகிரிய என்னும் முகவரியிலும் இயங்கி வந்த அதேவேளை, தற்போது 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புரை, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது. தற்போது நிறுவனம் தனது இலக்குகளை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு நாடு பூராகவும் பாடநெறிகளை நடாத்தி வருகின்றது. அவற்றுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் முக்கியம் பெறுகின்றன.

- சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறிகளுக்கான பாடத் திட்டங்களைத் தயார்படுத்துதல்
- சிங்களம் /தமிழ் / ஆங்கில மொழி கற்பித்தலுக்குரிய வளவாளர்களைப் பயிற்றுவித்தல்
- இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி மற்றும் இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

- வளவாளர்கள் தொடர்பான பின்னூட்டல் மற்றும் கண்காணிப்பு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்
- மொழிபெயர்ப்புத் தொடர்பான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல்
- அரச ஊழியர்களுக்கான பகுதி நேர இரண்டாம் மொழிப் பயிற்சிப் படநெறிகளை (மட்டம்,1, மட்டம் 2, மட்டம் 3, மட்டம் 4) நடைமுறைப்படுத்தப்படுத்தல்
- அரச ஊழியர்கள் மற்றும் க.பொ.த உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு வதிவிட மற்றும் வதிவிடமற்ற மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துதல்
- புதிதாக நியமனம் பெறுகின்ற அரச ஊழியர்களுக்கு குறுகிய காலப் பகுதிக்குள் இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல் (வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றம் ஏனைய ஊழியர்கள்)
- வானொலி அலை வரிசைகளினூடாக மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல்

நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்படும் வதிவிடப் பாடநெறிகள் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள எமது பயிற்சி நிலையத்திலே இடம்பெறும். மனோரம்மியமான ஒரு சூழலிலே அமையப் பெற்றுள்ள எமது இந்தப் பயிற்சி நிலையத்தில் 250 பங்குபற்றுநர்கள் ஒரே முறையில் பங்குபெறக்கூடிய விரிவுரை மண்டபமும், 30 பேர் பங்குபெறக்கூடிய மொழி ஆய்வு கூடமும், 60 பேருக்கான தங்குமிட வசதிகளும் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு வளவாளர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுவதோடு, நிறுவனத்தின் பணிக் குழாத்தினரும் இதன்பால் அர்ப்பணிப்படன் செயற்படுவர்.

**நோக்கக் கூற்று**

தேசிய மொழிப் பயிற்சியின் மூலம் இலங்கையர் மத்தியில் சமாதானத்தையும் சகவாழ்வையுயம் ஏற்படுத்துதல்

**பணிக்கூற்று**

அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மொழிக் கல்வி மற்றும் பயிற்சியின் பொருட்டு மும்மொழி சார் அறிவினை வழங்கும் ஒரு மத்திய நிலையமாகச் செயற்படுதல்

**நோக்கங்கள்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்புச் சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களையும் உரை பெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள், உரை பெயர்ப்பாளர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குதல்
- பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.

**நிறுவனத்தின் கடமைகள்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதன் பொருட்டு சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பாகவும் நீண்ட காலப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்காக ஆய்வு மற்றும் கற்றல் பெறுபேற்றினைப் பயன்படுத்துதலை நோக்காகக் கொண்டு மொழியினைப் பயிற்றுவிப்பதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கற்றல் செயற்பாடுகளை நடாத்துதல்.
- தகைமையுடையவர்களுக்கு மொழிப் பயிற்சி மற்றும் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலும் அப்பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக பூரணப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதலும்.
- மொழியினைக் கற்பதற்காக பயிற்சியுடையவர்கள் உள்ளடங்கிய சபையினை நிறுவுதல்.

- மொழியுடன் தொடர்புடைய தகவல்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான நிலையம் ஒன்றை நிறுவுதல்.
- மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு, மற்றும் சுருக்கெழுத்தாளர் ஆகிய விசேட குழுவினர்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விசேட மொழிப் பயிற்சிப் பாடநெறியினை நடாத்துதல்.
- தேவை என்று காணுமிடத்து சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விருத்தியை ஏற்படுத்துதல், அவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பாக குறித்த அதிகார சபைக்கு சிபாரிசினை முன்வைத்தல், சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலான மொழிகள் மற்றும் ஏனைய சர்வதேச மொழிகள் தொடர்பான மொழியியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அவர்களுக்கு உதவுதல் மற்றும் விருத்தி செய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான அனைத்துத் தீர்மானங்களையும் மேற்கொள்வது முகாமைத்துவச் சபையாகும். அதேபோன்று நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளிலே கல்விச் சபையானது பங்களிப்புச் செய்யும். ஆலோசனைச் சபையின் மூலம் நிறுவனத்தின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் தொடர்பிலான உற்பத்தித்திறன் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குவதோடு நிறுவனத்தின் பிரச்சினைகள், நிறுவனத்தின் முன்னேற்றம் என்பன தொடர்பிலும் கலந்துரையாடுவதற்கான கலந்துரையாடல் குழு ஒன்றினையும் சிபாரிசு செய்யும்.

## 2020 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகளும் ஏனைய வேலைத் திட்டங்களும்

ஏனைய வருடங்களைப் போன்றே 2020 ஆம் வருடமும் அரச ஊழியர்களுக்கான பாடநெறிகளையும் எனைய பாடநெறிகளையும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தாலும், நாட்டில் பரவிய கொரோனா தொற்றுக் காரணமாக எதிர்பார்த்த பாடநெறிகளை நிறைவுசெய்வதற்கு முடியாமல் போனது. எனினும் இவ்வருடத்தில் பின்வரும் பாடநெறிகளை நிறைவுசெய்வதற்கு முடியுமாக இருந்தது.

**பாடத்திட்டம் தயாரித்தல்**

இந்நிறுவனத்தினால் அரச ஊழியர்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் சிங்களம், தமிழ் பாடநெறிகளுக்கு அப்பால், ஆங்கிலம், கொரியா, ஹிந்தி ஆகிய மொழிப் பாடநெறிகளுக்கான பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டதோடு, மதகுருமார்கள், உள்;ராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கான தமிழ் மொழிப் பாடநெறிகளுக்கான பாடத்திட்டமும் 2020 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

## வளவாளர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்நிறுவனத்திலே தற்போது வளவாளர்களாக செயற்படுகின்றவர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் வழிகாட்டல் தொடர்பான வேலைத்திட்டங்களை 2020 ஆண்டு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. என்றாலும் நாட்டில் பரவிய கோவிட் தொற்று காரணமாக அத்தகைய வேலைத்திட்டங்கள் மூன்றினை மாத்திரமே 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. இத்தகைய வேலைத்திட்டங்களின் பொருட்டு 77 வளவாளர்கள் பங்குகொண்டதோடு இதன் பொருட்டு ரூபா. 45,000 செலவானது.

### வளவாளர்களுக்கான ஒரு நாள் வேலைத் திட்டம்

எமது நிறுவனத்தின் வளவாளர்கள் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வளவாளர்கள் ஆகியோரை இணைத்துக் கொண்டு பாடநெறிகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் ஒரு நாள் வேலைத் திட்டம் பொரள்ளை, இளைஞர் பௌத்த சங்கத்தில் இடம்பெற்றது. இந்த வேலைத்திட்டத்திலே 297 வளவாளர்கள் பங்குகொண்டதோடு, இதன்பொருட்டு ரூபா 186,000.00 செலவானது.

### ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள்

நிறுவனத்தினால் நாடு பூராகவும் ஏற்பாடு செய்யப்படும் மொழிப் பயிற்சிப் பாடநெறிகளிலே கற்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள் மேற்படி 05 நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்விலே பங்குகொண்டு அதிலே சித்திபெறும் ஆசிரியர்கள் மட்டுமே. இத்தகைய ஆசிரியர்கள் இதயபூர்வமாகப் பங்குபற்றுவதோடு "யசவவைஉையவழசல சுநகடநஉவளைந ர்நயசவ ர்ழடனளைபெ வுநயஉாபைெ "சழஉநளள என்னும் முறையினைப் பயன்படுத்திக் கற்றல் நடவடிக்கைகளிலே ஈடுபடுவர். தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்குடன்

அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களை உருவாக்குதலே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இத்தகைய பாடநெறிகளின் பொருட்டு பங்குபற்றுநர்களிடமிருந்து பாடக் கட்டணம் அறவிடப்படும் அதேவேளை, 2020 ஆம் ஆண்டு இத்தகைய பயிற்சிப் பாடநெறிகள்தம்புள்ளை பயிற்சி நிலையத்திலே இடம்பெற்றதோடு, இதன்போது 31 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

| **தொ.இ** | **இடம்** | **பாடநெறிகளின் எண்ணிக்கை** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| **1** | தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் | 31 | 173,274.19 |
| **மொத்த எண்ணிக்கை** | | 31 | 173,274.19 |

**<u>அரச ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட 06 நாட்கள் கொண்ட 50 மணித்தியால வதிவிடமற்ற சிங்கள, தமிழ் பயிற்சிப் பாடநெறிகள்</u>**

அரச நிர்வாக அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட 1/2014 (ஐ) என்னும் சுற்றுநிருபத்தின் மூலம் 50 வயதைப் பூர்த்திசெய்த அனைத்து அரச ஊழியர்களும், கனிஷ்ட சேவைப் பிரிவைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் 50 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியினைப் பின்பற்றுவதன் மூலம் மொழித் தேர்ச்சிப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். அதேபோல கனிஷ்டதர உத்தியோகத்தர்கள் இந்த நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் 50 மணித்தியாலப் பாடநெறியினைத் தொடர்வதன் மூலம் மேற்படி பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

2020 ஆம் ஆண்டு இத்தகைய பாடநெறிகள் இரண்டு நடாத்தப்பட்டதோடு, இதன் மூலம் 97 அரச ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**2020 ஆம் ஆண்டு கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்ட 6 நாட்களைக் கொண்ட (50 மணித்தியால) பாடநெறிகள்**

| **தொ.இ** | **இடம்** | **பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை** | **வருமானம் (ரூபா)** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அக்கரைப்பற்று, ஆதார வைத்தியசாலை | 37 | 16,550.00 | - |
| 2 | திபுலாகலை பிரதேச செயலகம் | 60 | 153,000.00 | 90,030.00 |
| **மொத்த எண்ணிக்கை** | | 97 | 169,550.00 | 90,030.00 |

## 12 நாட்கள் கொண்ட (100 மணித்தியால) சிங்கள / தமிழ் / பயிற்சிப் பாடநெறிகள்

கலாசார மற்றும் சமூக ஒன்றிணைப்பினை முன்னிட்டு மனிதாபிமானம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய அரச ஊழியர்களை உருவாக்கும் பொருட்டு நிறுவனம் முன்னெடுக்கும் ஒரு முயற்சியாக இந்த 12 நாட்கள் கொண்ட குறுகிய கால வேலைத் திட்டம் அமைகின்றது. இந்தப் பாடநெறியில் பங்குகொள்ளும் ஊழியர்கள் 12 நாட்கள் பாடநெறியில் பங்குகொள்ள வேண்டி இருப்பதோடு பாடநெறியின் இறுதியில் இடம்பெறுகின்ற வாய் மொழி மற்றும் எழுத்துப் பரீட்சைகளின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அவ்வாறே, அரச நிர்வாகச் சுற்றறிக்கை 1.ூ.2014.ூ.ஐஏ இன் அடிப்படையில் 50 வயதிற்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் இந்நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற 100 மணித்தியாலப் பாடநெறியில் பங்கு கொள்வதன் மூலம் மொழித் தேர்ச்சிப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். இதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் மூலம் 100 மணித்தியாலப் பாடநெறிகள் 03 இடம்பெற்றதோடு இதன் பொருட்டு அரச ஊழியர்கள் 97 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 2020 ஆம் அண்டு நடாத்தப்பட்ட 12 நாட்கள் கொண்ட (100 மணித்தியால) மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்

| தொ.இ | இடம் | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | நுரைச்சோலை மின்சார சபை | 32 | 160,000.00 | 80,780.00 |
| 2 | நுரைச்சோலை மின்சார சபை | 33 | 164,975.00 | 78,455.00 |
| 3 | மாத்தறை மின்சார சபை | 32 | 185,000.00 | 100,550.00 |
| **மொத்த எண்ணிக்கை** | | 97 | 509,75.00 | 259,785.00 |

**<u>வெவ்வேறு ஊழியர்களின் பொருட்டும் நடாத்தப்பட்ட 150 மணித்தியாலப் பாடநெறிகள்</u>**

வெவ்வேறு துறைகளிலும் சேவை புரிகின்ற அரச ஊழியர்களை இலக்காகக் கொண்டு இத்தகைய பாடநெறிகள் வதிவிடப் பாடநெறிகளாக, வதிவிடமற்ற பாடநெறிகளாக நடாத்தப்படுகின்றன. இவற்றுள் முக்கியமாக புதிதாக நியமனம் பெறுகின்ற வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சுங்க வரி ஊழியர்கள், மற்றும் தொழிநுட்ப ஊழியர்கள் என்போர் உள்ளடங்குகினறனர். 2020 ஆம் ஆண்டு இத்தகைய பாடநெறிகள் 13 இடம்பெற்றதோடு இதன் மூலம் 591 அரச ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**2020 ஆம் ஆண்டு கட்டணம் அறிவிடப்பட்டு நடாத்தப்பட்ட 150 மணித்தியால வதிவிடமற்ற மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

| தொ.இ | இடம் | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | அத்துள்கோட்டை, மின்சார சபை | 48 | 480,000.00 | 112,600.00 |
| 2 | தெஹிவளை மின்சார சபை | 62 | 620,000.00 | 94,920.00 |
| 3 | தெஹிவளை மின்சார சபை | 67 | 670,000.00 | 102,530.00 |
| 4 | நுரைச்சோலை மின்சார சபை | 35 | 350,000.00 | 123,040.00 |
| 5 | நுரைச்சோலை மின்சார சபை | 33 | 330,000.00 | 118,125.00 |
| 6 | நுரைச்சோலை மின்சார சபை | 28 | 289,975.00 | 98,400.00 |
| 7 | மாத்தறை மின்சார சபை | 34 | 340,000.00 | 128,670.00 |
| 8 | களுபோவிலை போதனா வைத்தியசாலை | 54 | 540,000.00 | 115,273.00 |
| மொத்த எண்ணிக்கை | | 361 | 3,619,975.00 | 893,558.00 |

**2020 ஆம் ஆண்டு கட்டணம் அறிவிடப்பட்டு நடாத்தப்பட்ட 150 மணித்தியால வதிவிட மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

| தொ. இ | இடம் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **1** | வைத்தியர்களுக்கான 150 மணித்தியால வதிவிட மொழிப் பயிற்சிப் பாடநெறி – அகலவத்தை பயிற்சி நிலையம் | 3 | 159 | 3,075,000.00 | 1,755,371.00 |
| **2** | பொறியியலாளர்களுக்கான 150 மணித்தியால வதிவிட மொழிப் பயிற்சிப் பாடநெறி – அகலவத்தை பயிற்சி நிலையம் | 2 | 71 | 1,775,000.00 | 887,816.00 |
| **மொத்த எண்ணிக்கை** | | 5 | 230 | 4,850,000.00 | 2,643,187.00 |

**மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களைப் பயிற்றுவித்தல் முக்கியமான ஒரு கடமையாகக் காணப்படுகின்றது.

இதனடிப்படையில் 2019.05.26 ஆம் திகதி மாக்கும்புரை பிரதான காரியாலயத்திலே இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு இப்பாடநெறி நிறைவுற்றது.

| தொ.இ | இடம் | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| **1** | NILET பிரதான காரியாலயம் | 20 | 1,057,000.00 | 558,224.00 |
| **முழு எண்ணிக்கை** | | 20 | 1,057,000.00 | 558,224.00 |

**ஹிந்தி மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி**

வெளிநாட்டு மொழிகளைக் கற்பிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடநெறியின் பொருட்டு 15 பேர் பங்குகொண்டதோடு அவர்களுள் 8 பேர் இப்பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தனர்.

| தொ.இ | இடம் | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|---|---|
| **1** | NILET பிரதான காரியாலயம் | 15 | 269,500.00 | 184,817.00 |
| **மொத்த எண்ணிக்கை** | | 15 | 269,500.00 | 184,817.00 |

**இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி**

இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறியினை பூர்த்திசெய்தவர்களுக்கு இப்பாடநெறி ஏற்பாடு செய்யப்பட்டது. இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு இப்பாடநெறியில் 47 பேர் பங்குகொண்டதோடு 2020 ஆம் ஆண்டும் இப்பாடநெறி நடாத்தப்பட்டது.

**பதிவுசெய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்**

மொழி கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் முகாமைத்துவச் சபையின் அனுமதியுடன் தனியார் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டதோடு 2020 ஆம் ஆண்டு அத்தகைய நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் வருமாறு:

| புாடநெறி | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 50 மணித்தியால பயிற்சிப் பாடநெறிகள் | 1 | 37 |
| 100 மணித்தியால பயிற்சிப் பாடநெறிகள் | 21 | 1,405 |

| | | |
|---|---|---|
| **முழு எண்ணிக்கை** | 22 | 1,442 |

### 8.8. கணக்கியல் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து நிதி நிர்வாகம் மற்றும் கணக்கியல் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படுவது கணக்கியல் பிரிவின் மூலமாகும். நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அதிகாரி பணிப்பாளர் நாயகமாகக் காணப்படுகின்ற அதேவேளை, நிதி நடவடிக்கைகள், கணக்கியல் நடவடிக்கைகள் என்பவற்றுக்குப் பொறுப்பாக கணக்காளர் இருப்பார்.

**கணக்கியல் பிரிவின் பிரதான பொறுப்புகள்**

பிரதான கணக்கியல் அதிகாரி என்னும் வகையில் அமைச்சின் செயலாளருக்கும் கணக்கியல் அதிகாரி என்னும் வகையில் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் நிதிப் பொறுப்புகளை சரிவர ஈடு செய்வதற்கும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுவதற்கும் உதவியாக இருத்தல்.

- அரசாங்கத்தின் நிதிச்சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் என்பவற்றுக்கு ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துதல்.
- நிதி முகாமைக் கணக்கியல் நிர்வாகத் தொகுதி ஒன்றை செயற்படுத்துதல்.
- நிதித் திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றைப் புதுப்பித்தலும்.
- நடப்பு மற்றும் சரியான நிதி அறிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- வருட இறுதிக் கணக்கினைத் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒப்படைத்தல்.
- வரிக் கொள்கைகள் மற்றும் ஏனைய அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ப இணங்கிச் செயற்படுதல்.
- குறிப்பிட்ட நேரத்தில் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கூலிகளை வழங்குதல்.
- நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகளின் நிதி நடவடிக்கைகளை நிர்வகித்தலும், தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்

**முக்கியமானகணக்கியல் கொள்கைகள்**

1. **நிறுவனம் பற்றிய தகவல்கள்**

   தேசிய மொழிக் கல்வி மற்றும பயிற்சி நிறுவனம் 2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட ஓர் அரச நிறுவனமாகும். இதன் பயிற்சி நிறுவனம் கலேவத்தஈ அகலவத்தை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

## 2. கணக்கியல் கொள்கைகள்

### 2.1 நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலின் அடிப்படைகள்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கணக்கறிக்கை இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படுகின்ற அதேவேளை,பொருத்தமான வகையில் அந்தக் கணக்கறிக்கைத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கியல் கொள்கைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 2.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

நடைமுறை வருடத்தின் நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்து விளங்கிக்கொள்ளும் வகையில் தேவையான முன்னைய வருட ஒப்பீட்டுத் தகவல்களும் நிதிக்கூற்றுக்களிலே காட்டப்படுகின்றன.

### 2.3 சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது, செலவு அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் ஒன்றுதிரட்டப்பட்ட தேய்மானப் பெறுமதியில் கழிக்கப்பட்டதன் பின்னரான பெறுமதியை விடவும் மிகவும் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கணக்கறிக்கைகளிலே காட்டப்பட்டுள்ளன. இத்தகைய சொத்துக்களின் செலவுகள் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி அவற்றின் வாழ்நாள் காலப் பகுதிக்குள் சமனாகப் பிரிந்து செல்லும் வகையில் பின்வரும் தேய்மான விகிதத்தின் அடிப்படையில் தேய்மானத்தை ஒதுக்குவது மேற்கொள்ளப்படுகின்றது.

| | விகிதம் (மூ) |
|---|---|
| கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள் | 2.5 |
| வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10 |
| இயந்திரங்கள், உபகரணங்கள் | 20 |
| வாகனங்கள் | 25 |
| கணினி | 25 |
| நூலகப் புத்தகங்கள் | 10 |

2014 ஆம் ஆண்டு வரை குறிப்பிட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலே அந்த முழு வருடத்துக்குமான தேய்மானத்தை வேறுபடுத்துகின்ற, அந்த சொத்தினைப் பாவனையில் இருந்து அகற்றும்போது பாவனையில் இருந்து அகற்றுகின்ற முழு வருடத்துக்குமான தேய்மானத்தை வேறுபடுத்துவது இடம்பெறவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் நிலையான சொத்துக்கள் கொள்வனவு

செய்யப்பட்ட அல்லது பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு தேய்மானத்தை ஒதுக்குவது இடம்பெற்றுள்ளது.

## 2.4 பணிக்கொடை ஒதுக்கீடு

ஓர் ஊழியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் சேவைக் காலம் ஒரு வருடம் பூர்தியாகியுள்ள அனைத்து ஊழியர்களினதும் முன்னைய கணக்கு வருடத்தின் இறுதி மாதத்தில் பெற்றுக் கொண்ட மாதாந்த சம்பளத்தின் அரைவாசிக்கு நிகரான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை நிதி ஒதுக்கப்படுகின்ற அதேவேளை, 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைய பணிக் கொடை நிதியம் செலுத்துவதற்கு உறுதி செய்யப்படுவது 5 வருட திருப்திகரமான வேலைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர் ஒருவர் சேவையிலிருந்து விலகும் போதாகும்.

## 2.5 கிடைக்க வேண்டிய நிலுவை

கிடைக்கப்பெற வேண்டிய கணக்கு மீதிகள் எதிர்பார்க்கப்பட்ட தீர்வை செய்யக்கூடிய பெறுமதிக்கு கணக்குக் கூற்றுக்களிலே காட்டப்படுகின்ற அதேவேளை, கணக்கு வருடத்தின் இறுதியில் கிடைக்கப்பெற வேண்டிய கணக்கு மிகுதிகளின் தீர்வை செய்யக்கூடிய எதிர்பார்க்கப்படாத பெறுமதி மதிப்பிடப்படுகின்றது. தீர்க்கப்படாத கடன் மிகுதி அறியப்பட்ட வருடத்தின் கணக்குக் கூற்றுக்களிலே சரிப்படுத்தப்படுகின்றது.

## 2.6 பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை

காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை சரிபடுத்துகையில் கையிலுள்ள பணம், வங்கி மீதி, வங்கிப் பற்றுப் பெறுமதி ஆகியவை பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவையாக அறியப்படுகின்ற அதேவேளை, நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வங்கிப் பற்றுப் பெறுமதி காட்டப்படும்.

## 2.7 ஐந்தொகையை குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் பூரணப்படுத்தல்

ஐந்தொகையில் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இடம்பெற்றுள்ள விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவையான இடங்களில் சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களிலே அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.8 பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்தல்

நிதி நிலைமைக்கூற்று சரிப்படுத்தும் திகதியில் உறுதியாகக் கணக்கிடக்கூடிய அனைத்துப் பொறுப்புகளினதும் பெறுமதி இந்த நிதிக் கூற்றுகளிலே உள்வாங்கப்படுகின்ற அதேவேளை, உறுதியாகக் கணக்கிட முடியாத பொறுப்புக்கள் தொடர்பில் தேவையான வகையில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.9 ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய ஓதுக்கீடு

ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன உரித்துடைய அதேவேளை, அவை முறையே 12மூ உம் 3மூ உம் ஆக நிறுவனத்தின் மூலம் பங்களிப்பு நிதியம் செலுத்தப்படுகின்றது.

## 2.10 வருமானம்

### 2.10.1 நடைமுறைக் கணக்கின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் மானியங்கள்

திறைசேரியினால் நடைமுறைச் செலவாக கிடைக்கப்பெறும் மானியம் நிறுவனத்தின் வருமானமாகக் கருதப்பட்டு நிதிக் கூற்றுகளிலே உள்ளடக்கப்படுகின்ற அதேவேளை, நிறுவனத்தின் அனைத்து வருமானமும் விரிவான வருமானக் கூற்றுகளிலே காட்டப்படும்.

### 2.10.2 மூலதனமும் மானியங்களும்

திறைசேரி மூலம் மூலதனச் செலவாகக் கிடைக்கப்பெறும் மானியம் இங்கே உள்ளவாங்கப்படுகின்ற அதேவேளை, மூலதனமூடான செலவுகள் இங்கே மேற்கொள்ளப்படும்.

## 2.11 செலவு

நிறுவனத்தின் நாளாந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான மீண்டெழும் செலவுகள் மற்றும் வருமான உற்பத்திச் செயற்பாடுகளின் பொருட்டான குறிப்பிட்ட வருடத்திலே மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் அனைத்தும் இங்கே காட்டப்படுகின்றன.

## 2.12 இருப்பு

பாடநெறிகளுக்குத் தேவையான புத்தகங்கள், எழுது கருவிகள் உட்பட அனைத்து இருப்புகளின் பெறுமதியும் செலவு மதிப்பிற்கு ஏற்ற வகையில் நிதிக் கூற்றுக்களிலே காட்டப்படுகின்றன.

## 3. நிதிக் கொள்கை மாற்றங்கள்

### 3.1 பெறுமானத் தேய்வு கொள்கைகள்

2014 ஆம் ஆண்டு வரை தேய்மானத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலே அந்த முழு வருடத்துக்குமான தேய்மானத்தை ஒதுக்குதல் மற்றும் அந்தச் சொத்தினைப் பாவனையில் இருந்து அகற்றும்போது பாவனையில் இருந்து அகற்றுகின்ற முழு வருடத்துக்ககுமான தேய்மானத்தை ஒதுக்காதிருத்தல் என்னும் கொள்கையினை, 2014 ஆம் ஆண்டின் பின்னர் குறிப்பிட்ட சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட திகதியினைக் கருத்தில் எடுத்து தேய்மானத்தை ஒதுக்கும் கொள்கை என வேறுபடுத்தப்பட்டுள்ளது.

## 4. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாச்சல் கூற்றுத் தாயரிக்கப்படும்போது நேரற்ற முறையை நடைமுறைப்படுத்தும் அதேவேளை, பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைக்குள்ளே வங்கி மீதி ∴ மிகைப்பெறுமதி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களிலே முக்கியமான ஒரு அம்சமாகும். நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2020 டிசம்பர் 31 வரையும் அதேநேரம் கடந்த வருடத்துக்கான மிகை தொடர்பான நிலவரங்கள் தொடர்பாக உண்மையான மற்றும் சாதாரண அறிக்கையை இங்கே சமர்பிப்பதாக உறுதிப்படுத்துகின்றோம். இந்த நிதிக்கூற்றுக்கள் அரச சட்ட திட்டங்களுக்கு ஏற்புடையதாகும்.

கணக்காளர் பணிப்பாளர் நாயகம்

